ஸ்ரீ

அழகியமணவாளதாசர்

என்கிற திவ்வியகவி

பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

அருளிச்செய்த

திருவரங்கத்தந்தாதி

மூலபாடம்.

ச-ம் பதிப்பு.

இஃது
சென்னபட்டணம்:
ஊ. புஷ்பரதசெட்டியாரால்
தமது
கலாரத்நாகா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1890.

ஸ்ரீராமஜயம்.

திருவரங்கத்தந்தாதி.

தனியன்.

மணவா ளரவிந்தை மார்நோக்க விம்மை மறுமையின்மா
மணவாளர் தம்பதம் வாய்த்திடுங் கோயிலில் வந்தவந்த
மணவாளர் பொற்றிருப் பாதாம் புயங்கட்கு மாலையென
மணவாளர் சூடும் யமகவந் தாதியை வாசிமினே.

காப்பு.

ஓராழி வெய்யவன் சூழுல் கேழுவந் தேத்தரங்கர்
காராழி வண்ணப் பெருமாளந் தாதிக்குக் காப்புரைக்கிற்
சீராழி யங்கையிற் பொற்பிரம் பேந்திய சேனையர்கோன்
கூராழி சங்கந் திருக்கதை நாந்தகங் கோதண்டமே. (க)

வையம் புகழ்பொய்கை பேய்பூதன் மாறன் மதுரகவி
யையன் மழிசைமன் கோழியர் கோனருட் பாண்பெருமான்
மெய்யன்பர் காற்பொடி விண்டுசித் தன்வியன் கோதைவெற்றி
நெய்யங்கை வேற்கலி யன்றமிழ் வேத நிலைசிறக்கவே. (உ)

சீதரன் பூமகள் சேனையர் கோன்றென் குருகைப்பிரா
னாத முனியுய்யக் கொண்டா ரிராமர்நல் லாளவந்தா
ரோதமில் வண்மைப் பராங்குச தாச ரெதித்தலைவர்
பாத மடைந்துய்ந்த வாழ்வானெம் பார்பட்டர் பற்றெமக்கே.()

திருமாலை யாண்டான் திருக்கோட்டி நம்பி திருவரங்கப்
பெருமா ளரையர் திருமலை நம்பி பெரியநம்பி
யருமால் கழல்சே ரெதிராசர் தாளிற்சிங் காதனராய்
வருமா ரியர்க ளெழுபத்து நால்வரொன் வான்றுணையே. (ச)

மாறன் பராங்கதி தந்தடி யேனை மறுட்பிறவி
மாறன் பரான சூழாத்துள்வைப் பான்றொல்லை வல்வினைக்கோர்
மாறன் பராமுகஞ் செய்யாம லென்கண் மலர்க்கண்வைத்த
மாறன் பராங்குசன் வாழ்கவென் னெஞ்சினும் வாக்கினுமே. ()

நூல்.

திருவரங் காவுறை மார்பா திசைமுகன் சேவிப்பக்கந்
திருவரங் காதரித் தின்னிசை பாடத் திருக்கண்வளர்
திருவரங் காவுன் பழவடி யேற்கருள் செய்யவெழுந்
திருவரங் காதலித் தேனுனக் கேதொண்டு செய்வதற்கே. (க)

செய்ய வளைக்குரு வின்னரு ளாற்றிருத் தாள்வணங்கிச்
செய்ய வளைக்குலஞ் சூழரங் கேசன் சிறிதமுது
செய்ய வளைக்கும் புவிக்குமங் காந்தசெவ் வாய்முகுந்தன்
செய்ய வளைக்குஞ் சிலம்பணி பாதங்கள் சேர்ந்தனமே. (உ)

தனமா தரஞ்சொற் குதலைப் புதல்வர் தரணியில்லந்
தனமா தரஞ்செயும் வாழ்வஞ்சி யேதஞ்ச நீயெனப்போந்
தனமா தரங்கிக்க வெற்பெடுத் தாய்தன் னனந்தசிங்கா
தனமா தரங்கமுள் ளாயரங் காமுத்தி தந்தருளே. (௩)

தந்த மலைக்குமுன் னின்றபி ரானெதிர் தாக்கிவெம்போர்
தந்த மலைக்குமைத் தானரங் கேசன்றன் பூவினிடைத்
தந்த மலைக்குத் தலைவன்பொற் பாதஞ் சரணென்றுய்யார்
தந்த மலைக்கும் வினையானை வார்பலர் தாரணிக்கே. (௪)

தாரணி தானவன் பாலிரந் தான்சங்கம் வாய்வைத்தொன்னார்
தாரணி தானவஞ் செய்தா னரங்கன் றமர்கள்பொருந்
தாரணி தான வமரா வதியுந் தருநிழலுந்
தாரணி தான வயிரா வதமுந் தருகினுமே. (௫)

தருக்காவ லாவென்று புல்லைப் பாடித் தனவிலைமா
தருக்காவ லாய்மயி லேகுயி லேயென்று தாமதராய்த்
தருக்காவ லாநெறிக் கேதிரி வீர்கவி சாற்றுமின்பத்
தருக்காவ லாயுதன் பின்றோன் றரங்கர்பொற் றாளிணைக்கே. ()

தாளத் தனத்தத்தைச் சொல்லிய ரால்வருந் தாழ்மலபா
தாளத் தனத்தத்தைத் தப்பகிற் பீர்புடை தங்கியவே
தாளத் தனத்தத்தைத் தீர்த்தா னரங்கன் சகடுதைத்த
தாளத் தனத்தத்தை யாயுதன் பாதந் தலைக்கொண்மினே. (எ)

தலையிலங் காபுரஞ் செற்ற னரங்கனென் றூழ்சொற்புன்கு
தலையிலங் காதரஞ் செய்தபி ரான்சர ணன்றிமற்றோர்
தலையிலங் காநின்ற கண்ணிலங் காண்கைக்குத் தாழுகைக்குத்
தலையிலங் காதிலங் கேட்கைக்கு வாயிலஞ் சாற்றுகைக்கே. (அ)

கைக்குஞ் சரமன் றளித்தா யரங்கமன் காக்கைக்குமாய்க்
கைக்குஞ் சரம சரம்படைத் தாய்கட னீறெழுத்து
கைக்குஞ் சரமக ரக்குழை யாயெனைக் கைக்கொளுடல்
கைக்குஞ் சரம தசையிலஞ் சேலென்றென் கண்முன்வந்தே. ()

வந்தனை யேற்றனை யென்புன்சொற் கொண்டனை வன்மனத்தே
வந்தனை யேற்றனை யாவையு மாயினை வான்றரவு
வந்தனை யேற்றனைத் தாளெனத்த தாளில்வைப் பாய்பலித்து
வந்தனை யேற்றனைத் தீர்த்தா யரங்கத்து மாதவனே. (கo)

மாதங்கத் தானை யரங்களை வஞ்ச னிலங்கையிலே
மாதங்கத் தானை யிருதிங்க டாழ்த்துப்பின் வாம்பரிதேர்
மாதங்கத் தானை வலத்தானை முன்வதைத் தானைத்தன்பான்
மாதங்கத் தானைவைத் தானைவைத் தேனென் மதியகத்தே. ()

மதிக்க வலைப்புண்ட வெண்டயிர் போல மறுகுறுமென்
மதிக்க வலைப்புண் டணிகின்றி லேன்மண்ணும் வானகமு
மதிக்க வலைப்புனல் சூழரங் காநின் மனத்தருடா
மதிக்க வலைப்புன் பிறப்பினி மேலும் வருங்கொலென்றே. ()

வருந்துவ ணைப்பட்ட மங்கைய ரென்மர் மனங்களைக்க
வருந்துவ ணைப்பட்ட வாயரங் கேசனை வஞ்சப்பகை
வருந்துவ ணைப்பட்ட வேழமட் டானை மறந்திலசோர்
வருந்துவ ணைப்பட்ட வீப்போன் மடந்தையர் மால்வலைக்கே. ()

மாலைக்கல் லார மடவார்புன் ணுக்கையில் வாஞ்சைவைத்து
மாலைக்கல் லாரம் புலிக்குகை யாகிற்பர் மாய்விப்பதோர்
மாலைக்கல் லாரம் புயத்தாளில் வைக்கு மதிலரங்க
மாலைக்கல் லாரஞ் சலியாபொன் னேசில மானிடரே. (௧௪)

மானிட ராக வரலரி தோர்மண் டலத்தினெறி
மானிட ராக மிலாதவ னுதன் மலரயனுர்
மானிட ராகமத் தாலன்ப ராய வரங்கத்துளெம்
மானிட ராக மலரடிக் காட்படும் வாழ்வரிதே. (௧௫)

அரிதா மணைக்கணத் தோலுடுத் தாரய னுர்க்கரியான்
அரிதா மணைக்கணம் மான்றிருப் பாத மடைமின்சன்மம்
அரிதா மணைக்கணந் தங்கா துயிரவ னார்வினைவில்
அரிதா மணைக்கண மீர்த்தோடும் பொன்னி யரங்கமன்றே. ()

அரங்காது வார்கணை கண்வள்ளை கோங்கி னரும்புமங்கை
அரங்காது வார்முலை யென்றைவர் வீழ்ந்தன ராடரவின்
அரங்காது வாரமி லாமணி யேயணி யார்மதில்சூழ்
அரங்காது வாரகை யாயடி யேனுன் னடைக்கலமே. (௧௭)

அடைக்கலந் தாயத் தவர்போ லுடலுறை யைவரையும்
அடைக்கலந் தாயுல கங்கொண்ட தாள்களுக் கண்டமுண்டாய்
அடைக்கலந் தாயரங் காவாயர் பாடியி லன்றுநெய்பால்
அடைக்கலந் தாய்வைத்து வாய்நெரித் தூட்ட வழுமையனே. ()

ஐய மருந்திவை யுன்னென்று மாதரட் டேடுஞ்செல்வம்
ஐய மருந்தினைப் போதே யவரின்ப மாதலினுல்
ஐய மருந்தியக் கங்குறு காமுன் னரங்கர்க்கன்பாய்
ஐய மருந்தியும் வாழ்மின்கண் மேலுமக் காநந்தமே. (௧௯)

நந்தம ரங்கனை மாகட லேழு நடுங்கவெய்த
நந்தம ரங்கனைப் பற்றுநெஞ் சேவினை யையுமுன்கை
நந்தம ரங்கனை யார்மயல் போம்வரு நற்கதிவா
நந்தம ரங்கனை வர்க்குமெஞ் ஞான்று நரகில்லையே. (௨0)

நரகந் தரம்புவி யிம்மூன் றிடத்து நனிமருவி
நரகந் தரங்கித்து வெங்காலற் கஞ்சுவர் நாயகவா
நரகந் தரம்புட் பிடரோ றரங்கர்நல் லாய்க்குலத்தி
நரகந் தரங்கமுற் றாரடி யார்க்கு நமனஞ்சுமே. (௨௧)

அஞ்சக் கரத்தலைக் கங்கைய னேற்றனு மஞ்சிறைய
அஞ்சக் கரத்தலைக் குண்டிகை யான்மன்டை யங்கைவிட்டே
அஞ்சக் கரத்தலைச் செய்துபித் தேக வருளரங்கன்
அஞ்சக் கரத்தலை வன்றுள லான்மற் றரணிலையே. (௨௨)

இலங்கையி லாதர னங்கரன் மோடி யெரிசுரத்தோன்
இலங்கையி லாத மலையான வீச னிரியவெம்போர்
இலங்கையி லாத படிவா ணனைச்செற்ற வென்னரங்கன்
இலங்கையி லாதவன் போகக்கண் டானென் னிதயத்தனே. ()

அத்தனை வேதனை யீன்ற வரங்கனை யைம்படைசேர்
அத்தனை வேதனை வாய்வைத்த மாயனை யாரணங்கோர்
அத்தனை வேதனைத் தீர்த்தானைச் சேர்க்கில ளாயிரஞ்சால்
அத்தனை வேதனை யப்புவள் சாந்தென் றனலனைத்தே. (௨௪)

அனைக்கலை வேலை யுடுத்தமண் பல்பக லான்டபெற்றல்
அனைக்கலை வேலை யுடைவேந்தர் வாழ்வெண்ண லைவளையும்
அனைக்கலை வேலை யவர்க்கே புரிவையென் றானுநெஞ்சே
அனைக்கலை வேலை யரங்கனுக் காட்பட வாதரியே. (௨௫)

ஆதவ னந்தரந் தோன்றுமற் கன்மழை யார்த்தெழுநாள்
ஆதவ னந்தர வெற்பெடுத் தானடி யார்பிழைபார்
ஆதவ னந்தரங் கத்தா னரங்க னடியனென்றுள்
ஆதவ னந்தரங் கன்டீர் வினைவந் தடைவதுவே. (௨௬)

அடையப்பன் ளுகங் கடிவா யமுதுக வங்குளிர்
அடையப்பன் ளுக மருப்பா யுதமிற வன்றுகுன்றால்
அடையப்பன் ளுக மிசைதாங்கப் பாலற் கருள்செய்ததால்
அடையப்பன் ளுகங் கரியா னரங்கனெட் டக்கரமே. (உஎ)

அக்கர வம்புனைந் தாரய ளுரிடை யாயிருநால்
அக்கர வம்பு மலராள் கொழுந னரங்கன்செங்கோல்
அக்கர வம்புயன் முன்மூல மென்ப தறிவித்திடான்
அக்கர வம்புவி மேல்வேழ மேவெளி யாக்கியதே. (உஅ)

ஆக்குவித் தார்குழ லாலரங் கேசரன் பால்விதுரன்
ஆக்குவித் தார வடிசிலுண் டார்கட லாடையகல்
ஆக்குவித் தாறி வற்றேனைத் தம்மடி யார்க்கடிமை
ஆக்குவித் தாடி யேயடி யேன்றுய்க்கு மாரமுதே. (உகூ)

ஆரா தனஞ்செய்து கண்டனின் கீர்த்தி யறைவன்றிரு
ஆரா தனஞ்செய்வன் வேதாவென் றாலடி யேன்புகழ்கைக்கு
ஆரா தனஞ்செய்ய போதாந் திருமக ளாகபல்பூண்
ஆரா தனஞ்செயன் பாகா வரங்கத் தமர்ந்தவனே. (௩0)

அமர வரம்பையி னல்லார் பலரந்திக் காப்பெடுப்ப
அமர வரம்பையில் வெவ்வேந்தர் சூழமண் ணுண்டிருந்தோர்
அமர வரம்பையில் கான்போ யிறந்தன ராதலில்வீடு
அமர வரம்பையின் மஞ்சா ரரங்கருக் காட்படுமே. (௩க)

ஆளாக வந்த வடியேற் கருள்பரி யானைதின்டேர்
ஆளாக வந்தனிற் செற்றிலங் கேசனை யட்டவல்வில்
ஆளாக வந்தன் புயந்துணித் தாயரங் காமுளரி
ஆளாக வந்தமி லுன்னடி யார்க்கன்ப னுவதற்கே. (௩உ)

ஆவா கனத்த ரடியார் மனத்துட்புள் ளானவொப்பில்
ஆவா கனத்த ரரங்கர்பொற் றாளுக் கடிமைப்படார்
ஆவா கனத்த வழுக்குடல் பேணி யறிவிழந்தவ்
ஆவா கனத்த ரிருந்தென் னிராமலென் னம்புவிக்கே. (௩௩)

அம்பு விலங்கை நகர்பாழ் படச்சங்கு மாழியும்விட்டு
அம்பு விலங்கைகொண் டாயரங் காவன் றிடங்கர்பற்றும்
அம்பு விலங்கை யளித்தா யினியென்னை யாசையென்றிய்
அம்பு விலங்கையிட் டேசஞ் சிறையி லடைத்திடலே. (௩௪)

இடவ மலைக்கும் புயங்க மலைக்கு மிலங்குமகல்
இடவ மலைக்கு மிருங்க மலைக்கு மிறைவசங்க
இடவ மலைக்கும் புனலரங் காவெய்த்த மார்க்கண்டன்கண்டு
இடவ மலைக்கு முலகழி யாதுள் ளிருந்ததென்னே. (௩௫)

இருந்தை யிலங்க வெளிறுப டாதென்செய் தாலுநிம்பத்து
இருந்தை யிலந்தித்தி யாதவை போற்புல்லர் யாவுங்கற்றுய்ந்து
இருந்தை யிலம்பன்ன கண்ணார்க்கல் லால்வெண்ணெ யில்லிலொ
இருந்தை யிலங்கை யரங்கர்க்கன் பாகி யிருக்கிலரோ. [ளித்து

இருக்குமந் தத்தி லறியா வரங்கன்மண் ணேழுண்டுந்தய்
இருக்குமந் தத்திரு வாய்மலர்ந் தானெட் டெழுத்தைக்குறி
இருக்குமந் தப்புத்தி யீர்த்துநல் வீடெய்த லாகுங்கைபோய்
இருக்குமந் தச்செவிட் மேன்முந் நீர்கடந் தேறிடிலே. (௩௭)

ஏறுங் கரியும் பரியுஞ்செற் றுன்பர னென்றுமன்றுள்
ஏறுங் கரிமறை யாதலி னூலயம் யாதுமக்கிடு
ஏறுங் கரியவ ரங்கர்க்கன் பாய்வினை யென்னுமிடி
ஏறுங் கரியு மினிமேற் பிறவி யிடரில்லையே. (௩௮)

இடராக வந்தென்னைப் புன்சிறு தெய்வங்க ளென்செயுமான்
இடராக வன்பிணி மாநாக மென்செயும் யான்வெருவி
இடராக வன்னி புனலிடி கோண்மற்று மென்செயும்வில்
இடராக வன்னரங் கன்றிருத் தாளென் னிதயத்ததே. (௩௯)

அத்திரங் காய மெனவுண ரேனென தாசையுன்கை
அத்திரங் காயத்தி யிற்பெரி தானனை யாகிப்பல்வீழ்
அத்திரங் காயந்தி ரம்போற் பொறியைந் தழியுமக்கால்
அத்திரங் காயரங் காவடி யேனுன் னடைக்கலமே. (௪0)

கலக்கூழைக் கைக்குங் கருத்துடை யீராங் கத்துளிலைக்
கலக்கூழைக் கைக்குங் கறியிட்டுத் துய்த்திருங் காதுபடைக்
கலக்கூழைக் கைக்குள் வருவா னணைக்கண் ணுதலும்விட்ட
கலக்கூழைக் கைக்குப்லை கண்டானை வீதியிற் கண்டுவந்தே. ()

கண்டக னாவின் பொருள்போல யாவும்பொய் காலனென்னுங்
கண்டக னாவி கவர்வது வேமெய் கதிநல்கெனக்
கண்டக னாவிப் பொழுதேசெல் கென்றருள் காரரங்கற்
கண்டக னாவின் புறக்கண்டு வாழ்த்திக் கடிதுய்ம்மினே. (௪௨)

கடிக்கும் பணிநஞ் சமுதாகுந் திங்குநன் காகும்பராக்
கடிக்கும் பணியலர் தாழ்வார்கல் லாமையுங் கற்றவையாங்
கடிக்கும் பணியற மெல்லா மரங்கர்பைங் கன்னித்துழாய்க்
கடிக்கும் பணியொளிக் கும்நல்ல பாதங் கருதினர்க்கே. (௪௩)

தினகர னார்கலி தீகாற் றொடுங்குஞ் செயலும்விண்மீ
தினகர னார்கொண்ட லேழ்செருக் காமையுஞ் சென்றெதிர்மோ
தினகர னாருயிர் செற்றா ரரங்கர் திகிரிசங்கேந்
தினகர னார்நம் பெருமா ளமைத்த திருக்கைகண்டே. (௪௪)

திருக்கா விரிக்கும் யமுனைக்குங் கங்கைக்குந் தெள்ளமுதாந்
திருக்கா விரிக்குங் கடற்கும் பிரான்றென் னரங்கமென்னத்
திருக்கா விரிக்கு மொழியார்க்குத் திமெழு காவிரன்புய்த்
திருக்கா விரிக்கும தெவ்வா றவனுங்கள் சென்மத்தையே. ()

சென்மந் தரங்கங் கருமஞ் சுழிபிணி சேலினங்கு
சென்மந் தரங்கதிர் பொன்கோள்கண் மாரிதின் கூற்றசனி
சென்மந் தரங்கவற் றுள்விழு வோர்களை சேர்க்கும்வங்கஞ்
சென்மந் தரங்கவின் றேளா ரரங்கர் திருப்பதமே. (௪௬)

பதக்கம லங்க லணிமார்ப பொன்னி படிந்திமையோர்
பதக்கம லங்க ளறுசீ ரரங்க பகட்டயிரா
பதக்கம லங்கரித் தூர்வோன் சிவனயன் பார்க்கவந்துன்
பதக்கம லங்க ளடியேன் றலைக்கென்று பாலிப்பதே. (௪௭)

பாலனஞ் செய்யமர் நாடாண்டு பூணொடு பட்டணிந்து
பாலனஞ் செய்யக லத்துண்டு மாதர்பல் போகத்தையும்
பாலனஞ் செய்ய விருப்ப திலையம் பருகிநந்தன்
பாலனஞ் செய்யவள் கோமா னரங்கம் பயில்கைநன்றே. ()

பையிலத்தி மூளை நரம்பூ னுதிரம் பரந்தகுரம்
பையிலத்தி யுள்வினை பாண்டமென் ணுமற்புன் பாவையர்தோற்
பையிலத்தி செய்து நரகெய்து வீருய்யப் பற்றுமினோ
பையிலத்தி மேவித் துயில்கூ ரரங்கர்பொற் பாதத்தையே. ()

பாதகங் கைக்கு மரங்கர்பல் பேய்பண் டிராவணனுற்
பாதகங் கைக்குமென் றெள்ளக்கொய் தார்படிக் கேற்றதிருப்
பாதகங் கைக்குள் விழுமுன்ன மேபங் கயன்விளக்கும்
பாதகங் கைக்குளிர் நீர்வீழ்ந்த தீசன் படர்சடைக்கே. (௫0)

படநாகத் தந்தர மீதிருப் பானெம் பரனரங்கன்
படநாகத் தந்தம் பறித்தோன் புகழைப் பரவுமின்க
படநாகத் தந்தக் கரனைம்பொல் லான்சிசு பாலன்முற்பல்
படநாகத் தந்த வசைக்குந்தந் தான்றொல் பரகதியே. (௫௧)

பரவையி லன்னகட் பாஞ்சாலி நின்பர மென்னதிரு
பரவையில் மேகலை யீந்தா னரங்கன் பணிந்திமையோர்
பரவையி லாழிப் பிரானடிக் கீழுற் பவித்தழியும்
பரவையில் மொக்குளைப் போற்பல கோடி பகிரண்டமே. ()

அண்ட மடங்கலை யுந்தந்து காத்தவை யந்தந்தன்பால்
அண்ட மடங்கலைச் செய்கா ரணமம்பொன் முத்தலைவான்
அண்ட மடங்கலை யீர்த்தோடும் பொன்னி யரங்கன்புட்கார்
அண்ட மடங்கலை முந்நீர் மகளுகப் பாகவென்றே. (௫௩)

ஆகம திக்கு முகமேன் முகமுடை யானயன்வாழ்
ஆகம திக்கு நவநீதக் கள்வ வவனிகொள்வார்
ஆகம திக்குளஞ் சேரரங் காவுன்னை யன்றித்தெய்வம்
ஆகம திக்குளென் னேனடி யேன்பிற ராணையுமே. (௫௪)

ஆரத் தநந்தருந் தாய்தந்தை யாநந்த மாவரிசம்
ஆரத் தநந்தனன் றிமைகண் டாலங் கௌத்துவபூண்
ஆரத் தநந்த சயனு வணியரங் காதிகிரி
ஆரத் தநந்தன் மதலாயென் றீங்குனக் கத்தன்மைத்தே.(௫௫)

அத்தனு மன்புள வன்னையும் பேரு மனந்தமதாம்
அத்தனு மன்புல னுதலி னுண்டரு ளம்புயைவீர்
அத்தனு மன்புய மீதே றரங்கனஞ் சார்ங்கவயர்
அத்தனு மன்புகல் பேரிரு வீர்க்கு மடியனென்றே. (௫௬)

அடியவ ராகவு மாட்கொள் ளவுமெண்ணி யாருயிர்கட்கு
அடியவ ராகம் படைத்தமை யாலக மேபெரிய
அடியவ ராக வரங்கருக் காட்செ யருட்கதையால்
அடியவ ராகஞ்செய் மாரனுக் காட்செயு மைவளையே. (௫௭)

வளையாழி வண்ண ரரங்கேச ரீசன்முன் வாணன்றிண்டோள்
வளையாழி யார்புள்ளின் வாகனத் தேவந்த நாட்டொடிற்றை
வளையா ழியது யராய்த்துாசு நாணு மதியுஞ்செங்கை
வளையா ழியும்வளி யும்மிழந் தாளென் மடமகளே. (௫௮)

மகரந்த காதலி வாழ்வென்ன வாரிசுட் டாய்திதிதன்
மகரந்த காதலி வானினுள் ளோர்க்குமன் னோர்க்குவட்டா
மகரந்த காதலி வார்குழை யாய்வளர் சீரங்கதா
மகரந்த காதலி வாக்கிற்சொல் லேன்மட வாரொதிரோ. (௫௯)

வாராக வாமன னேயரங் காவட்ட நேமிவல
வாராக வாவுன் வடிவுகண் டான்மன் மதனுமட
வாராக வாதரஞ் செய்வனென் றுலுய்யும் வண்ணமெங்கே
வாராக வாச முலையேனைப் போலுள்ள மாதருக்கே. (௬0)

மாதம்பத் தக்கொங்கை யும்மல்குற் றேரும் வயிறுமில்லை
மாதம்பத் தக்குறி யுங்கண்டி லேம்வந்து தோன்றினைபூ
மாதம்பத் தக்கெதிர் மார்பா வரங்கத்து வாழ்பரந்தா
மாதம்பத் தக்கருத் தில்லார் பிறப்பென்பர் வையகத்தே.(௬௧)

வைகுந்தர் தாமரை போற்பாதர் நாகத்து மாதர்புடை
வைகுந்த மேற்கொண் டிருந்தோர் வடிவைந்தின் வாழுமிடம்
வைகுந்தம் பாற்கடன் மாநீ ரயோத்திவண் பூந்துவரா
வைகுந்த மன்பர் மனஞ்சீ ரரங்கம் வடமலையே. (௬௨)

வடமலை தென்மலை கச்சி குறுங்குடி மானிற்பது
வடமலை வேலை யரங்கங் குடந்தை வளருமிடம்
வடமலை கொங்கைத் திருவோ டிருப்புவை குந்தங்கர
வடமலை யன்ப ருளநடை யாட்ட மறையந்தமே. (௬௩)

அந்தக ராசலம் வந்தா லுனையழை யாதிருப்பார்
அந்தக ராசலங் காபுரி யார்க்கரய் காமறையின்
அந்தக ராசலக் கூக்குர லோயுமுன் னூழ்தடங்கல்
அந்தக ராசலத் தேதுஞ்ச நேமி யறுக்கக்கண்டே. (௬௪)

அறுகு தலைப்பெய் பனிபோன்ற தாதுரு வாய்ப்பிறந்தல்
அறுகு தலைப்பிள்ளை யாய்க்காளை யாய்க்கிழ மாகியையள்
அறுகு தலைச்செய்து வீழ்காய நானென்னு மாரிருளை
அறுகு தலைக்கொள் பணியரங் காநின்க ளுசைதந்தே. (௬௫)

ஆசு கவிக்கு நிகரெனக் கில்லையென் றற்பனைப்பூ
ஆசு கவிக்குவில் வேள்வடி வாவறி வாலகத்திய்
ஆசு கவிக்கு வலயமன் னுவென் றரற்றியிரந்து
ஆசு கவிக்கும் புலவீர் புகழ்மி னரங்கனையே. (௬௬)

கனக விமானமற் றீனர்க் குரைக்கிலென் கால்பெற்றவா
கனக விமானற் கருடப்புள் ளூர்தியைக் கான்மலர்கோ
கனக விமானம் புவிமான் றடவரக் கண்வளருங்
கனக விமானத் தரங்கனை நாச்சொல்லக் கற்றபின்னே. (௬௭)

கற்றின மாயவை காளையர் வான்கண்டு மீணிணைவ
கற்றின மாயமு நீகன்று காளைய ராகிப்பல்ப
கற்றின மாயர் பரிவுறச் சேரி கலந்தமையுங்
கற்றின மாயவொன் னுவரங் காசெங் கமலற்குமே. (௬௮)

கமலங் குவளை மடவார் தனங்கண்க ளென்றுரைத்த
கமலங் குவளை முதுகாகி யுங்கரை வீர்புனற்கா
கமலங் குவளை விளையா டரங்கன்விண் காற்றுகனல்
கமலங் குவளையுண் டான்றொண்ட ராயும்மின் காமமற்றே. ()

காமனைத் தால்விழ வூதியக் காவைக் கவரரங்கன்
காமனைத் தாவென்று கைவார்க் கமுதன்கன் னெஞ்சர்க்கிரங்
காமனைத் தானைக் குங்கடற் பார்கலம் போன்றதுமீ
காமனைத் தாமரை யோன்கங்கை பாய்மரங் கான்மலரோ. (எ0)

மலருந்தி மேல்விழ மெய்நெரித் தான்வைய மேழுந்துஞ்சா
மலருந்தி னரங் கன்குற ளாய்மண் ணளந்தவனான்
மலருந்தி வாக்கதிர் வண்குடை யாய்முடி மாமணியாய்
மலருந்தி யாய்த்திருத் தாள்விர லாழி மணியொத்ததே. (எக)

மணிவாசற் றரங்க வொருகுடைக் கீழ்வையங் காத்துச்சிந்தா
மணிவா சவனென வாழ்ந்திருப் போர்பின்னை மாதிருக்கு
மணிவாச மார்பரங் காகேச வாவென்று வாழ்த்தித்திரு
மணிவாச கங்கொண் டணிவா ரடியை வணங்கினரோ. (எஉ)

வணங்கரி யானரங் கன்னடி யார்தொழ வாளரவு
வணங்கரி யாடற் பரிதேர் நடத்தெந்தை வானவர்க்கும்
வணங்கரி யானன்றிக் காப்பாரில் லாமைவிண் மண்ணறியும்
வணங்கரி யானவர் வாணன்கண் டாகனன் மார்க்கண்டனே. ()

கண்டலங் காரள கங்கெண்டை மேகங் கவிரிதழ்சொல்
கண்டலங் கார முலையிள நீரொன்று கன்னியர்சீர்
கண்டலங் கார மருளேன் புனற்கயல் கொக்கென்றஞ்சக்
கண்டலங் கார மலரரங்கே சர்க்குக் காதலனே. (எச)

காதலை வாரிமண் வெண்கோட்டில் வைத்துண்டு காட்டியரங்
காதலை வாகழற் குள்ளாக்கி னுய்கரப் பெங்கெனவே
காதலை வார்குழை வைதே கியைநின் கருத்துக்குங்
காதலை வானரர்த் தேடவிட் டாயிது கைதவமே. (எரு)

தவராக வக்கணை யொன்றாற் கடற்றெய்வந் தானென்றிருந்
தவராகந் தீர்த்துத் தொழக்கண்ட நீதர்ப்பை மேற்கிடந்து
தவராகப் பாவித்தென் னேதொழு தாய்தண் ணரங்கத்துமா
தவராக வாகண்ண னேயென்னெ ணுவவ தாரத்தனே. (எசு)

தாரா கணமன் னளந்தவந் நாளன்பர் சாத்துந்துழாய்த்
தாரா கணம்புயம் போலரங் காதல மேழுக்குமா
தாரா கணமங்கை யாயும்பர் தூவிய தண்மலர்வீழ்
தாரா கணமுகில் லாகாற்றிற் சூழ்வளந் தானெக்குமே. (எஎ)

தானந்தி யாகந் தவங்கல்வி தீர்த்தந் தழலிலவி
தானந்தி யாகந் தருமிழி பாயின தண்ணரங்கத்
தானந்தி யாகப் பகன்மறைத் தான்பெயர் தந்திடும்வே
தானந்தி யாகண் டலனறி யாப்பரந் தாமத்தையே. (எஅ)

தாமனை மாத்திரை மூப்பற்ற வானவர் தண்ணறுஞ்செந்
தாமனை மாத்திரை வந்தா டலைவனைத் தண்ணரங்க
தாமனை மாத்திரை போல்வளைந் தேற்றுத் தருப்பொருட்டால்
தாமனை மாத்திரைக் கேசங்கி ஞேசையிற் சாய்ந்தனரோ. (எகூ)

சாகைக்குந் தத்துத் துகிறாக்கி மாதர் தமைநகைத்தாய்
சாகைக்குந் தத்துவங் கட்குமெட் டாய்தண் புனலரங்கே
சாகைக்குந் தத்துப் புடையாழி யேந்த றமர்கள்வெய்யோர்
சாகைக்குந் தத்து தவிர்கைக்கும் போலுமுன் சங்கற்பமே. ()

சங்கத் தமரர் குழாத்தொடு மூழ்வினை தான்விலங்கச்
சங்கத் தமரன்ப ராயிருப் பீர்கட றுனவர்தே
சங்கத் தமரம் படவெய்த சார்ங்கத் தனுவரங்கன்
சங்கத் தமரன் சரணே சரணென்று தாழ்ந்திருமே. (அக)

இருந்தே னுகமுட வன்வனை நோக்கி யிருப்பதுபோல்
இருந்தே னுகந்துனை வைகுந்த நோக்கி யெதிர்பொருங்கேள்
இருந்தே னுகனும் படவதைத் தாய்வெண்ணெ யாமத்தொளித்
இருந்தே னுகாரங் காகானு நாளினி யென்றருளே. [து

அரும்பா கவதரிக் கும்பெய ராய்ப்புள் ளரசினுக்கோர்
அரும்பா கவதரக் தப்பனே யாயரங் காவெனவுன்
அரும்பா கவதர் பதநீர்த்தங் கொள்ளா தடிகள்கொப்புள்
அரும்பா கவதர் தொலைப்பார்கல் லார்கங்கை யாடுதற்கே. ()

ஆடுமுன் னீர்முதற் றீர்த்தத்தி னுலரு மாதவத்தால்
ஆடுமுன் னீர்மறை வேள்வியி னுலண்ட ராயுடன்மாறு
ஆடுமுன் னீரது மாயையி னுலென் றரங்கனைக்கொண்டு
ஆடுமுன் னீர்செய்த பாவமும் போய்முத்த ராம்வண்ணமே. ()

வண்ணங் கலிவஞ்சி வெண்பா வகவல் வகைதொடுத்தோர்
வண்ணங் கலிகெட வேண்டுமென் றேமக்கண் மாட்டுனாயேன்
வண்ணங் கலிகடல் போல்வா னரங்கன் வகுளச்செல்வன்
வண்ணங் கலியன் புகழ்தா னெனக்கென்று மாநிதியே. (அரு)

மானு கவரு நிருதன்புன் மாயையின் மங்கையென்னு
மானு கவரு மணியைமுன் னீங்கினன் மாயனென்பார்
மானு கவரும் பலர்சோலை சூழு மதிலரங்கா
மானு கவரு மமுதே யதுவுசின் மாயமன்றே. (அசு)

மாயா தவர்தலை வாவரங் காவட மாமதுரை
மாயா தவரண்டர் வந்தடைந் தான்மழு வாளிபிர [ப்ப
மாயா தவர்செய்வர் முந்நூல் செந் நூல்கொண்ட வண்ணமொ
மாயா தவரத் தனைக்குடல் கோத்ததுன் வாணகமே. (அஎ)

நகமுண்ட கந்தரித் தாற்கருண் மாயர்க்கு ஞாலமுந்நீர்
நகமுண் டகமகிழ்ந் தார்க்கடி யேமென்மி னற்கதிவா
நகமுண் டகம்பர னென்னு தரங்கனை நாடிலய
நகமுண் டகமலர் தான்குவி யாது நடுக்குளத்தே. (அஅ)

குளப்படி நெய்யடி சிற்கோத்த தோகொள்ளப் பற்றியதோ
குளப்படி யிற்றிங்கள் சேரரங் காகோல மாயவன்றுன்
குளப்படி காட்டும் பிறைமறுப் போலொரு கோட்டிருந்து
குளப்படி யின்னகத் தட்பரல் போன்ற குவலயமே. (அக)

குவலையஞ் சூழ்கடல் காயா மரகதங் கொண்டனெய்தல்
குவலையங் கண்டன்பர் நைவொன் றுற்கொற்ற வாணற்குவா
குவலைய நேமிதொட் டாயரங் காகொடும் பல்பிறப்பா
குவலையங் கற்றுனைக் காணிலென் ஞுங்கொல் குறிப்பவர்க்கே.

குறியானைச் செங்க ணெடியானை வானவர் கோவைச்சங்கக்
குறியானை வித்த திருவரங் கேசனைக் கூவினின்று
குறியானை காத்தவ னைப்பாடி னேன்கொடி கூப்பிடினுங் [றே.
குறியானை யப்பவர் போற்கொடி யேன்சொலுங் கொள்வனென்

வனத்திற் சிலம்பி விடுநூலுட் பட்டு மசகமெய்த்த
வனத்திற்சிலம்பின போற்பிணி வாய்ப்பட்டென் வாய்புலம்பின்
வனத்திற் சிலம்பின் குரலன்னம் வாழு மரங்கனிப்பு
வனத்திற்சிலம்பின் றுன்கேட்கு மோவும்பர்வாழ்த்தைவிட்டே.

விடத்தேனை மன்னும் வனப்பாழ்ங் கிணற்றுள்வெம் பாம்பு பற்றும், விடத்தேனை வாய்வண்டு தேன்வேட்டல் போல்விசித் துக்கொடுபோய், விடத்தே னையில்வெங்கட் கூற்றையென் ஞுதெண்ணும் வேட்கையெல்லாம், விடத்தேனை யூரரங் கன் றிருத் தாளில் விழுநெஞ்சமே. (கூ௩)

விழுங்கூன் றசைச்சுவர் நீர்மலங் கோழைவெம் பித்தொடுங்க
விழுங்கூ னரம்புறி யென்பேணி தோற்சட்டை வீழ்ந்துநொந்த
விழுங்கூத்த லாரழப் பாடையிற் போய்ச்சுடும் வெய்யசெந்தீ
விழுங்கூன நோய்க்குடில் வேண்டே னரங்கவி மானத்தனே.()

மானத்து வண்ட லுழவோ ரொழுத்தின் வடிவுற்றசீர்
மானத்து வண்ட வினையாள ராயினு மால்வளர்வி
மானத்து வண்டல மாமரங் கம்வழி யாவரினு
மானத்து வண்டமர் தாரண்ட ராம்பதம் வாய்க்குமங்கே (கூரு)

அங்காக்கைக் கேமங்கைக் கீந்தா னரங்க னவனிக்குவாய்
அங்காக்கைக் கேபசித் தானிற்க வேமுத்தி யாக்கித்துயர்

அங்காக்கைக் கேசிலர் வேறே தொழுவ ரருந்திரவிய்
அங்காக்கைக் கேதனத் தாடரு மோதிரு வன்றியிலே. (கூசு)

அன்றே யடைய வுனக்கே யடிமையென் றுய்ந்துணர்ந்தார்
அன்றே யடையப் படுவா ருனையரங் காவனத்திய்
அன்றே யடையை பயில்வோரு மீதறி யாரறிஞர்
அன்றே யடையைம் புலனுறு நன்கில்லை யாங்கவர்க்கே. (கூஎ)

ஆங்கார மாமின்னைத் தோய்மார் பரங்க னளேயினையுண்டு
ஆங்கார மானில முண்டற்குத் தொண்டனிவ் வண்டத்தப்பா
ஆங்கார மான்பகு திப்புறம் போயமு தாற்றிற்படிந்து
ஆங்கார மானடி காண்பே னவன்ற னருள்சிந்தித்தே. (கூஅ)

சிந்தா குலமுய்யக் குன்றெடுத் தாய்தென் னரங்கசுற்றுஞ்
சிந்தா குலகம் படைத்தளித் தாய்கிலஞ் சென்றிரந்த
சிந்தா குலவுசெல் வந்தந்தை தாய்குரு தெய்வமுநீ
சிந்தா குலமடைந் தேனடி யேன்சென்மந் தீர்த்தருளே. (கூகூ)

தீரத் தரங்கப் பவநோய் துடைத்தென்னைத் தேவரொடுந்
தீரத் தரங்கப் பணிகாப்ப வைத்த செயலென்பதோர்
தீரத் தரங்க வபயமென் றார்க்குந் திரைப்பொன்னிசூழ்
தீரத் தரங்கன் சிலம்பார்ந்த செய்ய திருவடியே. (க00)

பணவா ளரவி னரங்கேசர் தாளிற் பருதிவளை
கிணவாளஞ் சார்ங்கங் கதைதோளிற் சாத்தின னீணிலமேற்
குணவா ளராம்பட்டர்க் கேழேழ் பிறப்புங் குடியடியான்
மணவாள தாசன் யமகவந் தாதி வனைந்தனனே. (௱க)

முற்றிற்று.
